Ragistered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம்:- 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | வைகாசி 18 | 31 - 05 - 1992) | ஞாயிற்றுக்கிழமை | ஓசை: 103

## இலங்கை திரும்பிய அகதிகளுக்கு நிவாரணத்திட்டம் எதுவுமில்லை

தமிழகத்தில் இருந்து நாடுதிரும்பியுள்ள தமிழ் அகதிகளின் புனர் வாழ்வுக்கான திட்டம் எதனையும் அரசு இதுவரை தயாரிக்கவில்லை. அதேவேளை தாயகம் திரும்பிய அகதிகளின் நலவாழ்வுத் திட்டத்திற்கென வெளிநாட்டு உதவியாக கிடைத்த பெருமளவு நிதி தேசிய பாதுகாப்பு நிதியுடன் சேர்க்கப்பட்டிருப்பதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அகதிகளின் புனர்வாழ்வுக்கென வெளிநாட்டு உதவித்திட்டம் ஒன்றின்கீழ் கணிசமான அளவு நிதி உதவி கிடைக்கும் என்பதாலேயே தமிழகத்தில் தங்கியிருந்த தமிழ் அகதிகள் வலுக்கட்டாயமாக இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். சுமார் முப்பதாயிரம் அகதிக்குடும்பங்கள் சுயவிருப்பத்தின் பேரில் நாடு [4 ஆம் பக்கம் பார்க்க]

### கட்டுவன், வீமன்காமம், மாவிட்டபுரம் பகுதியில்

# விடுதலை புலிகள் - ராணுவம் கடும் மோதல்

# 15 சிங்கள படையினர் பலி: பலர் படுகாயம்

## 7காவலரண்கள் தகர்ப்பு 5 இராணுவத்தினர் பலி

### வவுனியா புலிகள் துணிகர தாக்குதல்

(வவுனியா)

வவுனியா மாமடு தொடர் காவலரண்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் திடீர் அதிரடித் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டு ஏழு காவலரண்களைக் கைப்பற்றி அழித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றது. சுமார் ஐந்து நிமிடங்கள் மட்டுமே நீடித்த இத்தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். மிகுதிப் பேர் காயங்களுடன் தப்பியோடிவிட்டனர்.

இதேவேளை தொடர் காவலரண்களில் இருந்து இவர்களுக்கு உதவியாக வந்த இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

பெருமளவு ஆயுதங்கள் இத்தாக்குதலின் போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இத்தாக்குதல்களின் போது இரண்டு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

### கைப்பற்றிய ஆயுதங்கள்

வவுனியா மாமடுவில் விடுதலை புலிகளால் மேற்கொள்ளப்பட்ட காவலரண் மீதான தாக்குதலின் போது பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விபரம் வருமாறு:-

★ 303 எல்.எம்.ஜி - 01
★ இதற்குரிய மேலதிக சுடு குழல் - 01
★ போல்டிஸ்பட் ஜி-3 - 01
★ ரி-56-1 - 02
★ எஸ் எல்.ஆர் - 01
★ ஜி-3 மகசின் - 09
★ 303 எல்.எம் ஜி மகசீன் - 06
★ எஸ்.எல்.ஆர். மகசீன் - 02
★ ஏ கே கோல்சர் - 01
★ ரி 56 மகசீன் - 06
★ நேட்டோ ரவைகள் - 490
★ நடுத்தரரவைகள் - 235
★ 303 ரவைகள் - 1050
★ ஜி-3 பைனட் - 01
★ சப்பாத்து - 01 சோடி
★ கிட்பாக் - 10
★ மழை அங்கி - 02
★ தண்ணீர்க் கான் - 08

## இரு போராளிகள் வீரச்சாவு

## ஒரு சீன டாங்கி நிர்மூலம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை7 மணியளவில் கட்டுவன், வீமன்காமம்,மாவிட்டபுரம், தச்சன்காடு ஆகியபகுதிகளிலிருந்த காவலரண்களிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் தெல்லிப்பளையை நோக்கி முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிப் படையணிகள் இராணுவத்தை இடைமறித்து வீராவேசத்துடன்போரிட்டன. டாங்கிகள், கவசவாகனங்கள், பீரங்கிகள் சகிதம் முன்னேற முயன்ற தரைப் படைக்கு உதவியாக ஆகாயப் படையும், கடற்படையும் பாரிய குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டன. மாலை வரை தொடர்ச்சியாக நடைபெற்ற உக்கிர சண்டையில் 15க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். சீன டாங்கி ஒன்றும் நாசமாக்கப்பட்டது. புலிகள் தரப்பில் 8 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

வீரவேங்கை தமிழன்



## கண்மூடித்தனமான தாக்குதல் வலி. வடக்கில் பாரிய அழிவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கின் பல்வேறு பகுதிகள் மீதும் நேற்று சிறிலங்காவின் முப்படைகளும் கூட்டாக நடாத்திய தாக்குதல்களின்போது ஏழு அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். முப்பதிற்கும் பலாலி இராணுவ முகாமில் இருந்தும் காங்கேசன் துறை காபர்வியூ ஹொட்டேல் இராணுவ முகாமில் இருந்தும் தொடர்ச்சியான ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. விமானப் படையினரது குண்டு வீச்சு விமானங்களும் உலங்கு வானூர்தி [4 ஆம் பக்கம் பார்க்க]

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த

வைத் தழுவிக்கொண்டனர்.

## இரு போராளிகள் வீரச்சாவு

**கப்டன் துரைக்கண்ணா** **வீரவேங்கை சயந்திரன்**





(வவுனியா)
வவுனியா மாமடுவில் நேற்றுமுன்தினம் இராணுவ காவலரண்கள் தாக்கி அழிப்பின்போது இரண்டு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் துரைக்கண்ணா (சரத்-அந்தோனிப்பிள்ளை சகாயரெக்னோ, வேப்பங்குளம் வவுனியா) சயந்திரன் (அடைக்கலம் சிவகுமார் மதனை) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## மானிப்பாயில் இறுதி அஞ்சலி!

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பளைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்று இடம்பெற்ற மோதலில் வீரச்சாவு அடைந்த எட்டு வீரவேங்கைகளினதும் புகழ் உடல்கள் இன்று மாலை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

## பீரங்கி தாக்குதல் மூவர் காயம்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்புப பகுதிமீது சிறிலங்கா கடற்படையினர் நடாத்திய பீரங்கித்தாக்குதலில்மூவர் படுகாயமடைந்துள்ளனர்

கந்தசாமி (வயது 31), கதிர்காமநாதன் (வயது 32), நல்லவைரவன் (வயது 31) ஆகியோரே இச் சம்பவத்தில்காயமடைந்துள்ளனர்.



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் அராலி வெளிப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 12 15 மணியளவில் எதிர்பாரதவிதமாக இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

படடுள்ளனர். முப்பதிற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் மருத்துவ மனைகள், வர்த்தக நிலையங்கள் உட்பட பல கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன.

நேற்று அதிகாலை முதல்

## கட்டுவன் பகுதி மோதலில் 8 புலிகள் வீரச்சாவு

நேற்று கட்டுவன், மாவிட்டபுரம், வீமன்காமம், தச்சன்காடு ஆகிய இடங்களில் உள்ள சிறிலங்கா இராணுவ காவலரண்களிலிருந்து வெளியேற முயன்ற இராணுவத்தினருடன் ஏற்பட்ட கடும் மோதலில் எட்டு விடுதலைப் புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

வீரச்சாவைத் தழுவிக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஐவர் உட்பட ஏழு பேர் பலி

(யாழ்ப்பாணம்)
பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து மல்லாகம் அகதிமுகாம் ஒன்றின் மீது நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் உடல் சிதறிப் பலியாகியுள்ளதுடன் மேலும் இருவர் பலியாகியுள்ளனர்.

நேற்று மாலை 3-30 மணியளவில நடாத்தப்பட்ட இத்தாக்குதலின் போது மல்லாகம் கோணப்புரம் என்ற இடத்தில் அமைந்துள்ள அகதிகள் முகாம் ஒன்றின் மீது ஓர் ஆட்லறி ஷெல் வீழ்ந்து வெடித்தது. அகதி முகாமின் தாழ்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# முல்லையில் உக்கிர மோதல் ராணுவத்திற்கு பெரும் இழப்பு

[முல்லைத்தீவு]
முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து அளம்பில் நோக்கி கடந்த வியாழனன்று வெளியேறிவந்த இராணுவத்தினர்மீது நேற்று மூன்றாவது நாளாக விடுதலைப் புலிகள் கடும்தாக்குதலை மேற்கொண்டனர். நான்காம் கட்டைப் பகுதிக்கும் ஐந்தாம் கட்டைப் பகுதிக்கும் இடையில் வைத்து இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலினால் இராணுவ தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.

ரி- 56 டாங்கிகள், நவீனரக ஆயுதங்கள் சகிதம் யுத்தநடவடிக்கையை மேற்கொண்டு வரும் இராணுவத்திற்கு உதவியாக குண்டுவீச்சு விமானங்களும் உலங்கு வானூர்திகளும் வான் தாக்குதலை நடா

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மூன்று முகாமிலிருந்து வந்த ராணுவத்துடன் புலிகள் மோதினர்

### வாகனேரியில் 15 நிமிட துணிகர தாக்குதல்

மட்டக்களப்பு வாகனேரியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் மேற்கொண்ட தாக்குதலில் 27 இராணுவத்தினர் கொல்லப்பட்டது தெரிந்தே.

இச் சம்பவம் பற்றிமேலும் விபரங்கள் தெரிய வந்துள்ளன காலை 9 25 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அள்ளிய ஆயுதங்கள்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு வாகனேரியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு!

★ ஏ கே எல்.எம் ஜி - 02
★ ரி-81-1 - 09
★ ரி-56-1 - 03
★ ரி-56-2 - 06
★ ஏ கே.எல்.எம் ஜி ரம் மசீன் - 08
★ ஏ கே.எல்.எம்.ஜி லிங்-485
★ ரி-56 மசீன் - 35

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 9 வேங்கைகள் வீரச்சாவு

மட்டக்களப்பு வாகனேரியில் நேற்று முன்தினம் இராணுவத்தினரின் மீதான துணிகரத் தாக்குதலில் ஒன்பது விடுதலைப் புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் சிதம்பரநாதன் (முகுந்தன் - குழந்தைவேல் கோவிந்தராஜா பெண்டுகள் சேனை, கிரான்), லெப்டினன்ட் பாலசந்திரன் (வேல்முருகு கணேசமூர்த்தி சந்திவெளி முறக்கொட்டாஞ்சேனை), லெப்டினன் சாந்தன் (இரத்தினசிங்கம் ஐங்கரன், விநாயகபுரம், திருக்கோவில்),

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இரு நாள் மோதலில் 10 இராணுவத்தினர் பலி

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவில் கடந்த 28 ஆம், 29 ஆம் ஆகிய திகதிகளில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் குறைந்தது பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர். இம் மோதல்களின் போது இரு கவசவாகனங்கள் அழிக்கப்பட்ட செய்தி நேற்று வெளிவந்தது தெரிந்ததே.

## 7 வேங்கைகள் வீரச்சாவு

முல்லைத்தீவில் நேற்று இடம் பெற்ற உக்கிர மோதலில் ஏழு வேங்கைகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர்

கப்டன் குட்டி அன்பு (ஐயம்பிள்ளை சிவகுமார் மாசியப்பிட்டி சண்டிலிப்பாய்), லெப். மறவன் சுலோஜன் (பாக்கியதுரை தயாளசீலன் 7 ஆம் வட்டாரம், கட்டைபறிச்சான், மூதூர்), ராஜன் (அன்னலிங்கம் மதியழகன் உடுவில் தெற்கு, மானிப்பாய்) குமலந்திரன் (கனகரத்தினம் சாந்தகுமாரி துர்காவீதி 4ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு), நந்தன் (செல்லையா சந்திரன் கண்டி வீதி, பனிக்கங்குளம் மாங்குளம்) வெற்றி (செல்வசீலன் புண்ணியராஜ், இறம்பைக்குளம், ஓமந்தை, வவுனியா), சடையன் [சுதா] (கருசாமி யோகபாலன், சுதந்திரபுரம், புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு) ஆகியோரே இம்மோதல்களின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்களாவர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமதுவீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வரி விளம்பரம்

### ஆண்டு 5 PAPER CLASS

ஆண்டு 5 புலமைப் பரிசில் Paper Class. தூர இட மாணவரின் வசதிகருதி சனி ஞாயிறு பி.ப. 4.00 மணி- 6.00 மணி நடைபெறும்.

ஆரம்பம் 30-05-1992 சனி பி.ப 4.00, மணி திறமையானவை நிரூபிட்ட ளவுமாணவர் சேர்த்துக் கொள்ளப்படுவர். புதிய கல்வி நிலையம் 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [2607]

### இரசாயன நூல்

ஆசிரியர் - சதீஸ்.பௌதிக இரசாயனம் பகுதி I நூல் வெளிவந்து விட்டது. 108, பிறவுண்றோட், யாழ்ப்பாணம். [2611]

### தவறிவிட்டது

27-05-92 (வவுனியா-கொழும்பு) பயணம் செய்யும்போது பெருமாள் நாகநாதன் [இல 660270205 V) என்பவரது அடையாள அட்டையும் வடபகுதிக்கு வெளியே செல்லும் பாஸ்சும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பெருமாள் நாகநாதன், 44/1 லோட்டஸ் வீதி, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும். [2617]

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். B0nd Institutes 58 1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (சி-4478)

### புலமைப் பரிசில்

அரசாங்கத்தால் 26-04-92 (ஞாயிறு) நடத்தப்பட்ட பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன் விற்பனையாகின்றன. பாடசாலைகளுக்கும், தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் விசேட சலுகையுண்டு. பரீட்சைப் பகுதி, Bond கல்வி நிறுவனம். யாழ்ப்பாணம். [சி/4470]

### பிடிபட்டனர்

வரணிப் பகுதியில் பட்டப் பகலில் வழிப்பறி இருடர்கள் நடமாட்டம் காணப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வரணி மகாவித்தியாலத்திற்கும் சுட்டிபுரத்திற்கும் இடையில் காடுகளுக்குள் பதுங்கியிருந்த கொள்ளையர்கள் இருவரும் நாலு துவிச்சக்கர வண்டியும் கென்மராட்சி காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிய வருகிறது கைதுசெய்யப்பட்ட இவர்களிடம் இருந்து சேலைகள், மணிகூடுகள் சங்கிலி போன்றவை காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுட்டிபுரத்தில் திருவிழா நடைபெற்று வருவதால் பக்தர்கள் நடமாட்டம் இருந்து வருவதைப் பயன் படுத்தி கொள்ளை முயற்சிகள் நடைபெற்று வருகிறது. (82)

### சுட்டுக்கொலை

காலிமாவட்டம் பெந்தோட்டப் பொலிஸ் நிலைய பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்

கடந்த திங்கட்கிழமை இவர் ரோந்தில் ஈடுபட்டிருந்தபோது இவர் சுடப்பட்டார் இக்கொலைக்குரிய காரணம் தெரியவரவில்லை


## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு

சனி, ஞாயிறு தினங்களில்

மாலை 4.00, 6.00 மணி

காட்சிகளாகக் காண்பிக்கப்படுகின்றது.

VIPER

(வஞ்சக தன்மையுடைய ஒருவன்)

(சி4469)


மகசீன் சிறையில்

# தடுத்து வைக்கப்பட்டுள்ள 39 இளைஞர்கள் விபரம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினரால் கடந்த காலங்களில் வடக்குப் பகுதிகளில் கைது செய்யப்பட்டு கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 39 தமிழ் இளைஞர்களது பெயர் விபரங்களைக கூட்டுப்படைத் தலைமையகம் வெளியிட்டுள்ளது இவர்களது விபரங்கள் வருமாறு:

ஜோன் பொஸ்கோ எருடியநாதன் தாவடியடி, மகேஸ்வரன்/திலீபன் உரும்பிராய், யூட்/கஜேந்திரன் றமேஷ் சிறுவிலநகரம், கோப்பாய், வடக்கு, வின்சன் கெனடி/பேனாட் சாந்தா அந்தோனி, மாவத்தை பருத்தித்துறை. எஸ். குமாரதாசன்/றொபின் பண்டத்தரிப்பு, ஜீவானந்தசிவம்/இராசு ஆனைக்கோட்டை, பாலசுப்பிரமணியம்/சானந்தன் பள்ளிய வீதி, சங்கானை, சிவராசா/டிஸ்கோ இல, 4 ஸ்ரான்லிவீதி யாழ்ப்பாணம், சிவஞானம் சிவந்தன் அதிகாரி செல்லமுத்து வீதி, மானிப்பாய், முத்துலிங்கம் பல்வாணன் இல,08, 3-மபிரிவு, பருத்தியடைப்பு, ஊர்காவற்துறை அல்பிரட் நிக்கொலஸ் சோலைபுரம், கொட்டடி யாழ்ப்பாணம், சுப்பிரமணியம் சற்குணநாதன் மாவிட்டபுரம், டானியல் தோமஸ் புன்னாலைக்கட்டுவன், சண்முகம் சின்னையா பூதர்(வடக்கு) மடம், ஆதிகன் முகாம், கோப்பாய், சுப்பையா ஜெயராஜன், கொருடாவில், சாவகச்சேரி, குமரசாமி சத்தியசீலன் உடுவில் தெற்கு. அரியகுட்டி நவரட்ணம் பதிவாளர் ஒருங்கை, திருநெல்வேலி கிழக்கு, கணபதிசந்திரகுமார், இல. 332 6-ம் யூனிற், தர்மபுரம் நடராசா வேலுப்பிள்ளை இத்தாவில் பளை, சுப்பிரமணியம் நவரத்தினம் இல 37, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம், சின்னவன் திருச்செல்வம் புன்னாலைக்கட்டுவன் தெற்கு. சின்னத்தம்பி துரைச்சாமி தெல்லிப்பளை, சுப்பிரமணியம் கோகுலதாஸ் பிரட்டைக்குளம், முருகன், ஜெயவர்த்தன கீன்னம் சந்திரசேகரம், மெதடிஸ்சேச், பன்னமதது கோமாரி, இராசையா எட்வேட் ஞானராஜ் அதிபர், குமை எம்.எம் ரி.எம் பாடசாலை, பன்னம்பட்டு, கோமாஸ்பிரி வின்சன் வில்லியம் மரியதாஸ் டாக்டர் சுப்பிரமணியம் றோட், சுன்னாகம், சன்னதி சிறிஸ்கந்தராசா அந்றேயூஸ் ரேஸ், முரசுமோட்டை, கணபதிப்பிள்ளை நவரத்தினம் 246/3, முரசுமோட்டை, சின்னத்துரை சிறீமோகன் மாலங்காடு, சுன்னாகம், அல்பிரட் செபரட்ணம் 22, இராசேந்திரன் வீதி யாழ்ப்பாணம், மருதமுத்து சிவசுப்பிரமணியம் மண்கும்பான், 4-ம் பிரிவு வேலணை, இம்மானுவேல் செல்மாலை மத்தியூஸ்றோட், யாழ்ப்பாணம், ஜெயரட்ணம் பஸ்கரன் குமரபுரம். பரந்தன், கந்தையா மரியபாலன் இல 24. குவன் றோட், அரியாலை. சுந்தரராஜா சுகுமார் சுதுமலை வடக்கு, கந்தசாமி நாமணி மாறன் மீசாலை தெற்கு துரைராசா கிரிதரன் யாழ்ப்பாணம், செபஸ்தியன்பிள்ளை அற்புதன்ஞானசிங்கர் இல 111/4, கொந்தன் றோட், யாழ்ப்பாணம், சின்னத்துரை மோகன் மயிலடி வடக்கு (ச)

# வளலாய் - கதிரிப்பாயில் மோதலில் வீரகாவியம் படைத்த மாவீரர்கள்



லெப்டினன் இசைவாணன் (வசந்தன்)



வீரவேங்கை இலக்கியன் (புஸ்பானந்தன்)



வீரவேங்கை ஆவுடையான் (ஆனந்தன்)

## போராட்டத்தில் இணைப்பு

வல்வைக் கடற்புலிகளின் பணிமனையில் ஒரு தாயார் தனது பூரண விருப்பத்துடன் மகனை கையளித்துள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கந்தசாமி இராசேஸ்வரி என்னும் பெண்மணி தனது மகன் கஜேந்திரனை கடற்புலிகள் பணிமனையில் ஒப்படைத்துள்ளார். இவர் தனது பூரண விருப்பத்துடன் ஒப்படைத்தார் என்பதை உறுதிப்படுத்தி கடிதம் ஒன்றையும் அப் பணிமனையில் ஒப்படைத்தார். மேலும் இத் தாயாரின் இளைய மகனாகிய ராஜேந்திரன் என்பவர் போராளியாக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தையல் பயிற்சி

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தினால் நடாத்தப்படும் மூன்றாம் கட்ட தையல் பயிற்சி அடுத்த மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

மேற்படி தையல் பயிற்சியை பெறவிரும்பும் மாணவிகள் நாளை முதலாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இப் பயிற்சி சுருட்டுத் தொழிலாளிகளின் பிள்ளைகளுக்கும் போராளி குடும்பம் மாவீரர் குடும்ப அங்கத்தவர்களுக்கும் இலவசமானதாகும் என வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (பா)

### கண்டெடுக்கப் பட்டுள்ளது

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் ஜெயமலர் என்பவரின் அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு யாழ்ப்பாணம் அரசினர் பெரு வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் பெற்றுக் கொள்ளவும்.

* *

சட்டநாதன் சங்கரநாதன் என்பவரது [அரியாலை] அடையாள அட்டை ஒன்றும் பணமும் அடங்கிய பேர்ஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த அடையாளக்காட்டி அலுவலக நேரங்களில் எமது காரியாலயத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## நினைவுகூருகின்றோம்...

### 1992-05-31

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை அக்கரை பற்றுப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய - நாதன் (இளையதம்பி பாக்கியராசா - காரைதீவு, அம்பாறை)

திருக்கோணமலை / மூதூர், தங்கநகர்ப் பகுதியிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு, கந்தளாய்ப் பாலத்தருகே வைத்து கொலை செய்யப்பட்ட -

★ தீபன் (செல்வராஜா நவரட்ணராஜா (நவம்) - கிளிவெட்டி, மூதூர், திருகோணமலை)

★ குமார் (சதாசிவம் திருக்குமார் - கிளிவெட்டி, மூதூர், திருக்கோணமலை)

★ மாயவன் (மகேந்திரன் மயில்வாகனன் - கிளிவெட்டி, மூதூர், திருக்கோணமலை)

★ ரங்கா (விஸ்வலிங்கம் குணசேகரம் - தங்கநகர், மூதூர், திருக்கோணமலை)

★ மாஸ்ரர் (பயில்வாகனம் குமாரகுலசிங்கம் - தங்கநகர், மூதூர், திருக்கோணமலை)


★ ராஜு (அந்தோனிப்பிள்ளை ராஜேந்திரன் - திருக்கோணமலை)

★ ம. குலேந்திரன் (கிளிவெட்டி, மூதூர், திருக்கோணமலை)

(வஞ்சக தன்மையுடைய ஒருவன்)

(சி4469)

# 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 15-6-28

மறைவு: 21-4-92

## செல்லையா பேரம்பலம்

எங்கள் குடும்ப விளக்கு அணைந்த பொழுது இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாப செய்தி அனுப்பியவர்களுக்கும், இன்னும் பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நேற்று (30.5 92) சனிக்கிழமை அந்தியேட்டிக்கிரியை நடைபெற்றது அஸ்தி திருவடிநிலையில் கரைக்கப்பட்டது இன்று (31.5 92) ஞாயிற்றுக்கிழமை வீட்டுக் கிருத்தியம் எமது இல்லததில் நடைபெறும் அவ்வமையம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து அன்னாரின் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

52/2 வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்
(2616)

---

இசைவாணன் (வசந்தன்) | இலக்கியன் (புஸ்பானந்தன்) | ஆவுடையான் (ஆனந்தன்)

28-05-1992 இல் பலாலி முகாமிலிருந்து வளலாய்-கதிரிப்பாய் ஊடாக தொண்டமனாறு நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தை விடுதலைப் புலிகள் விரட்டியடித்து வீரச் சாதனை படைத்தனர். இரண்டு கவச வாகனங்கள் அழிக்கப்பட்டு, பத்திற்கு மேறபட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்ட இப்போரில், ஒன்பது போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தை செலுத்துகின்றனர்.



வீரவேங்கை விவேகன் (சிவனேசன்)



வீரவேங்கை துரோணன் (கோடிஸ்வரன்)



வீரவேங்கை தங்கப்பன் (கேதீஸ்)



வீரவேங்கை பவளன் (நந்தகுமார்)



வீரவேங்கை சிவகுமார் (ஜெயானந்தம்)



வீரவேங்கை வீரச்செல்வன் (வதனன்)

---

★ ம. குலேந்திரன் (கிளிவெட்டி, மூதூர், திருக்கோணமலை)

★ பஞ்சாட்சரம் சுந்தரலிங்கம் (தங்கநகர், மூதூர், திருகோணமலை)

★ மயில்வாகனம் அமிர்தகுலசிங்கம் (தங்கநகர், மூதூர், திருகோணமலை)

★ இராசையா தங்கன் (தங்கநகர், மூதூர், திருகோணமலை)

★ கந்தசாமி (இராசையா கந்தசாமி - தங்கநகர், மூதூர், திருகோணமலை)

இதே சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட 28 தமிழர்கள்.

திருக்கோணமலை - நிலாவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொலலப்பட்ட குழந்தை - 6 - பெண்கள் உட்பட - 9 தமிழர்கள்.

1989-ம் ஆண்டு மாமுனையில் 2-வது நாளாக இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் -

லெப். சுலக்சன் (கணபதிப்பிள்ளை சிறிரங்கநாதன் - உடுத்துறை தெற்கு, தாளையடி)

சூரி (சறுப்பையா செல்வகுமார்-உடுத்துறை தெற்கு தாளையடி)

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவததினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

ராகுலன் (குமாரசாமி குகானந்தன் - இல, 96. ஜெயந்திநகர், கிளிநொச்சி)

திருக்கோணமலை, உப்பாற்றுப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் படகில் பயணஞ் செய்து கொண்டிருந்தோர் மீது மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள் -

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகளில் — வவுனியா தாண்டிக்குளம் சோதனை முகாம் பகுதியில் வைதது சிறிலங்காப் படையினரால் கடத்திச் செல்லபபட்டு காணாமற் போன பல தமிழ் இளைஞர்கள்.

## ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4482)

## சிந்தனைக்கு

தோல்வியைக் கூட தாங்கிக் கொள்ளலாம்.
அத்துடன் வரும் அனுதாபம் தான்
தாங்க முடியாத வேதனை.

- ராபர்ட் சேம்பர்ஸ் எட்வர்ட்ஸ்.

ஈழநாதம்

81, ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம் 31-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 95

# தொடரும் தோல்விகளில் இந்திய ராஜதந்திரம்

"விடுதலைப் புலிகள் மீது இந்திய அரசாங்கம் விதித்துள்ள தடையானது அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தையே காட்டுகின்றது" இவ்வாறு இந்தியாவில் முன்னணி ஆங்கிலத் தினசரியான 'டெய்லி ரெலிகிராப்' குற்றம் சாட்டியுள்ளது அத்தோடு, வெளியுறவுக் கொள்கையில் தோல்வி ஏற்பட்டால் அதைத் திருத்திக் கொள்ள பல தசாப்தங்கள் செல்லும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளது.

'டெய்லி ரெலிகிராப்' சுட்டிக்காட்டியது போன்று வெளியுறவுக் கொள்கையில் தோல்வி ஏற்பட்டால் அதைத் திருத்திக் கொள்ள பல தசாப்தங்கள் செல்லும் என்பதற்கு இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையையே உதாரணமாகக் காட்டலாம். இந்திய - இலங்கை விவகாரத்தில் எண்பதுகளின் மத்தியில் இருந்தே இந்தியா கடைப்பிடித்த வெளியுறவுக் கொள்கை தவறானதாகும். அதன் தொடர்ச்சியாகவே 1987 ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தமும், ஐந்து வருடங்களின் பின்னர் அமைந்த புலிகள் மீதான தடை உத்தரவும் உள்ளது

1987 ஆம் ஆண்டு இந்திய - சிறிலங்கா சமாதான உடன்படிக்கை ஏற்பட்டபோது இது தோல்வியில் முடிவடையும் என ஆரம்பத்திலேயே இலங்கைத் தமிழர் தரப்பால் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அதனை இந்தியா உணர்ந்து கொள்ள ஒரு சில மாதங்கள் ஆயினும் சென்றது ஆனல், புலிகள் மீதான தடையால ஏற்பட்ட இராஜதந்திரத் தோல்வியை உணர்ந்து கொள்ள ஒரு வாரம் மட்டுமே போதுமானதாக இருந்தது.

சுமார் ஒரு வருட காலமாக இந்திய இராஜதந்திரிகளினாலும், அரசியல்வாதிகளினாலும் தீவிரமாக ஆலோசித்து எடுத்த இம்முடிவானது ஒரு வார காலத்திற்குள தோல்வியைத் தழுவிக் கொள்வதென்பது, இந்தியாவின் கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடு என்பதில் தவறு எதுவுமில்லை அதாவது, இத்தடை மூலம் இந்திய அரசாங்கம் மேற்கொள்ள எத்தனித்த இருவிடயங்கள் தோல்வியில் முடிவுற்றன.

தடை மூலம் விடுதலைப் புலிகளுக்கு அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும் என்ற இந்தியாவின் நோக்கம் எந்தவித அர்த்தமும் இல்லாதது. ஏனெனில் விடுதலைப் புலிகள் இந்திய மண்ணிலோ, கடற்பரப்பிலோ தமது நடவடிக்கைகளை நிறுத்திய பல மாதங்கள் ஆகிவிட்டன. இந்நிலையில் இவ்வாறு ஒன்றிற்குத் தடை விதிப்பதென்பது வேடிக்கையானது ஒன்றேயாகும்.

இரண்டாவதாக விடுதலைப் புலிகள் மீது தடை விதிப்பதன் மூலமும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அழுத்

# இந்திய - அமெரிக்க கடற்படைகளின் கூட்டு ஒத்திகை

இந்தியக் கடற்படையுடன் இணைந்து அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் நடத்திய கூட்டு கடற்படைப் பயிற்சி நேற்றுமுன்தினம் பிற்பகலில் நிறைவடைந்தது, இப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த போர்க் கப்பல்கள் தற்போது இந்தியாவின் கோவா துறைமுகம் நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பயிற்சியில் இந்தியாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் தலா இரண்டு போர்க்கப்பல்கள் பங்கு கொண்டிருந்தன. ஐ எம் எஸ் ரஞ்சித், ஐ. எம். எஸ் கோமதி என்னும் இந்தியக் கடற்படையின் இரண்டு போர்க்கப்பல்களும், அமெரிக்காவின் ஏழாவது கடற்படை அணியைச் சேர்ந்த யு.எஸ்.எஸ் ரே விட், ஆர். ரே, யு எஸ். எஸ் வர்னடிக்ஸ் என்னும் இரு போர்க் கப்பல்களும் இந்தக் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டவையாகும் இந்தியாவின் வரலாற்றில் அமெரிக்காவுடன் இணைந்து போர் ஒத்திகைப் பயிற்சி ஒன்றை நடத்தியது இதுவே முதல் தடவையாகும்.

இந்தப் பயிற்சி பற்றிய முதல் அறிவிப்பு இவ்வாண்டின் ஆரம்பத்தில் வாஷிங்டனில் வெளியிடப்பட்டதையடுத்து பலவேறு தரப்பினரதும் விசேட கவனத்தை இது ஈர்த்திருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் மட்டுமன்றி இந்து சமுத்திரத்தின் கரையோரப் பிரதேச நாடுகள் பலவற்றிலும் இருந்து இது தொடர்பான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

எனினும் இராணுவ ரீதியாகப் பார்த்தால் இந்தப் பயிற்சி நடவடிக்கை என்பது மிக இலகுவானதாகவும், நவீனமானதும், மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளைக் கொண்டதுமாக இருந்தது என்பது தெளிவு இந்தியவும், அமெரிக்காவும் இத்தகைய பயிற்சியில் ஈடுபட்டது இதுவே முதல் தடவை. கடலில் தகவல் பரிமாற்றம் மற்றும் இலகு குறிப்புக்களை மட்டுமே அடங்கியதாகவே இது இருந்தது பெரிய நிகழ்ச்சி எதையும் உள்ளடக்கவில்லை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால் இப்பயிற்சியை முன்னிட்டு எந்தவொரு ஏவுகணையும் தெற்கு அரபிக் கடல் பக்கமாகவோ அல்லது வேறு மார்க்கம் எதிலுமோ செலுத்தப்படவில்லை

எப்படியிருப்பினும் இப் பயிற்சி தொடர்பான பல்வேறு உணர்வலைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன ஆனால் உண்மையில் இந்தியக் கடற்படையானது அவுஸ்திரேலியா, பிரிட்டன், பிரான்சு மற்றும் இந்தோனேசியா நாடுகளின் கடற்படைகளுடன் நடத்திய கூட்டுப் பயிற்சியைப் போன்றே இதுவும் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்திய - அமெரிக்க கூட்டுக் கடற்படைப் பயிற்சி பற்றி பாதுகாப்பு ஆய்வாளர் கப்டன் சி. என். உதயபாஸ்கர் எழுதிய ஆய்வுரையின் மொழியாக்கம். கேரளாவின் கொச்சி துறைமுகத்திற்கு அப்பால் அரேபியக் கடலில் இந்தியப் போர்க்கப்பல்களும், அமெரிக்க கடற்படையின் போர்கப்பல்களும் நாற்பத்தியெட்டு மணிநேரக் கூட்டுப் பயிற்சி ஒன்றை நடாத்தியது தெரிந்ததே.

ஆனால் கெடுபிடி போர் மலிந்திருந்த காலத்தில் வாஷிங்டன் பற்றியும் அமெரிக்க கடற்படை பற்றியும் நிலவிய மதிப்பீடு வேறாக இருந்தது உலகின் மிகவும் சக்திவாய்ந்ததும், அதி நவீன தொழில் நுட்ப சாதனங்களைக் கொண்டதுமான அமெரிக்கக் கடற்படையுடன் இந்தியக் கடற்படை இணைந்து பயிற்சி மேற்கொண்டமையே முக்கியமானதாகும்.

தற்போதைய நிலையில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் செல்வாக்கு செலுத்தக் கூடிய அமெரிக்க கடற்படையும், இந்து சமுத்திர கரையோர பிரதேச நாடுகளில் வலிமைமிக்க கடற்படையான இந்தியக் கடற்படையும், கூட்டுப்பயிற்சியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆரோக்கியமான கூட்டுணர்வு இந்த இரு கடற்படையினரிடையிலும் வளர்வது இந்தப் பிராந்தியத்தில் ஸ்திர நிலையைப் பேணவும், பராமரிக்கவும் உதவும். இதன் மூலம் பாரசீகக்குடாவிலிருந்து ஆசிய பசுபிக் ஈறாக உள்ள பகுதிகளில் இருக்கும் ஒடுங்கிய கப்பற் போக்குவரத்துக்களை கண்காணிப்பது இலகுவானதாகும்.

இந்த வகையில் இரு கடற்படையினருக்கும் இடையில் ஏற்படும் உறவானது இந்தியாவைப் பொறுத்தவரை முக்கியமானதாகும். இதன் மூலம் நாடுகளுக்கிடையில் நம்பிக்கை உணர்வும் நல்லுறவும் கட்டி வளர்க்கப்பட முடியும். பல துறைகளிலும் இந்திய - அமெரிக்க உறவில் முட்கள் நிறைந்திருப்பதைப் புறக்கணித்துவிட முடியாது என்றலும் இந்தப் பயிற்சி நடத்தப்பட்ட முறையானது நல்ல ஒரு முன்னுதாரணத்தைக் காட்டியுள்ளது என்றே கூறலாம்.

பல கட்சி ஜனநாயக ஆட்சியைக் கொண்ட இரண்டு பெரிய நாடுகளும் இணைந்து இயங்குவது சாத்தியம் என்பதை இது காட்டியுள்ளது.

# இந்திய குடியரசுத் தலைவர் தேர்தல் ஜூலை 23-ல் இடம் பெறலாம்?

இந்தியாவில் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் எதிர்வரும் ஜூலை மாதம் 13-ம் திகதி நடைபெறவுள்ளது.

தேர்தல் கமிஷனினால் இது தொடர்பான அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான முறையான அறிவிப்பு வரும் ஜூன் மாதம் 10-ம் திகதி வெளியிடப்படும் எனவும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கு ஜூன் மாதம் 24-ம் திகதியே இறுதித் தினம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 25-ம் திகதி வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு 27-ம திகதி வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்வதற்கான இறுதித் திகதி ஆகும்.

தேர்தலில் வாக்குப்பதிவு அவசியம் ஏற்பட்டால் ஜூன் 13-ம் திகதி நடாத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம்மாநிலங்கள் அவையின் தலைமைச் செயலாளர்கள் குடியரசுத்தலைவர் தேர்தலுக்கு தேர்தல் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற இரு அவை

இந்திய - அமெரிக்க

## கடற்படைப் பயிற்சிக்கு இடதுசாரி முன். கண்டனம்

(டில்லி)

இந்தியாவும் அமெரிக்காவும் சேர்ந்து நடாத்திய கூட்டு கடற்படைப் பயிற்சியை இடதுசாரி முன்னணிக் கமிட்டி வன்மையாக கண்டனம் செய்துள்ளது

இந்த கூட்டு கடற்படைப் பயிற்சியின் மூலம் இந்தியாவின் பாதுகாப்பு வலைமைகளை அமெரிக்கா அறிந்து கொள்வதற்கு ஏதுவாக அமைகிறது என நேற்று முன்தினம் கல்கத்தாவில் கூடியஇடதுசாரி முன்னணிக் கமிட்டி அச்சம் தெரிவித்துள்ளது,

கேரளத்தில் நூற்றுக்கணக்கான இடதுசாரித் தொண்டர்கள் கொச்சிக் கடற்படைத்தளத்திற்கு ஊர்வலமாகச் சென்று தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

போபர்ஸ் பீரங்கி ஊழல்

## தகவலறிக்கையை எதிர்த்து

ஆகாசவாணி, தூரதர்ஷன்

## ஊழியர்களின் கிளர்ச்சி இடைநிறுத்தப்பட்டது

(டில்லி)

இந்தியாவின் [வானொலி தொலைக்காட்சி] ஆகாசவாணி தூரதர்சன் உத்தியோகஸ்தர்கள் கடந்த இரண்டு தினங்களாக நடாத்தி வந்த கிளர்ச்சி நடவடிக்கைகள் நேற்று முன்தினம் பிரதமர் நரசிமமராவை இவ் ஊழியர் சங்க பிரதிநிதிகள் கலந்துரையாடியதன் பின் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இவ் ஊழியர் சங்க பிரதிநிதிகள் பயங்கரவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட வானொலி பொறியிலாளர் குடும்பத்துக்கு சகல உதவிகளும் அளிக்கப்பட வேண்டும் எனக்கோரிக்கை விடுத்திருந்தனர் இப்பொறியியலாளரின் குடும்பத்திற்கு பிரதமர் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்திருந்தார்.

பிரதமரிடம் ஊழியர் இது தொடர்பாக மஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர்.

இதேவேளை பதற்றமான பகுதிகளில் பணியாற்றும் ஆகாசவாணி மற்றும் தூரதர்ஷன் ஊழியர்களுக்கு அதிக காபபுறுதி பாதுகாப்பு அளிப்பது குறித்து நிதி அமைச்சகத்துடன் செய்தி ஒலிபரப்பு அமைச்சகம் ஆலோசனை நடாத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## யூகோ குடியரசிலிருந்து ச.தேசெஞ்சிலுவை விலகியது

(பெல்கிரேட்)

முன்னாள் யூகோஸ்லாவிய குடியரசுகளான பொஸ்னியா-கசகோவியாவில் இருந்து நகரில் இருந்து தனது உறுப்பினர்களை ஏற்கனவே விலக்கிக் கொண்டுள்ளது. கடந்த வாரம் இச்சங்கத்தின் தொண்

விதிப்பதென்பது வேடிக்கையானது ஒன்றேயாகும்.

இரண்டாவதாக விடுதலைப்புலிகள் மீது தடை விதிப்பதன் மூலமும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அழுத்தத்தை உண்டுபண்ணி பிரேமதாசா அரசாங்கத்தை நெருக்கடிக்கு உள்ளாக்குவதாகும். இதிலும் இந்தியா தற்பொழுது தோல்வியையே தழுவியுள்ளது எனலாம். விடுதலைப் புலிகள் மீதான தடை மூலம் இந்தியா தன்மீது இராஜதந்திர அழுத்தத்தைப் போடுவதை உடனேயே உணர்ந்துகொண்ட சிறிலங்கா அரசாங்கம் இந்தியாவின் நடவடிக்கைக்கு ஆரம்பத்திலேயே முட்டுக்கட்டை போட்டு தடுத்துவிட்டது.

இந்நிலையில் இந்தியா விடுதலைப்புலிகள் மீதும் சிறிலங்கா அரசாங்கம் மீதும் போட முற்பட்ட தடைகளும் இராஜதந்திர அழுத்தங்களும், இந்தியாவிற்கு கேடுவிளைவிப்பவையாகவும், இந்திய இராஜதந்திரத்திற்கு சவால்விடுபவையாகவும் உள்ளன. விடுதலைப் புலிகளைத் தடைசெய்யவேண்டுமெனத் தீவிரமாக எழுதிவந்த பிரபல இந்திய ஆங்கில தினசரியான 'இந்து' பத்திரிகை தற்பொழுது இலங்கை விவகாரத்தில் இந்திய ராஜதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைக் கட்டுரையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

"புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்ட பின்னர் இலங்கையில் இந்திய இராஜதந்திரம் மிகவும் சிக்கல்வாய்ந்த நிலைமை ஒன்றை எதிர்நோக்குகின்றது இலங்கையில் வடக்கு - கிழக்கில் சமாதானம், அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சியைக் குலைப்பதாக கொழும்பினால் குற்றம் சாட்டப்படக் கூடிய ஒரு அபாயத்தை இன்றைய நிலையில் டில்லி எதிர்நோக்கின்றது" இவ்வாறாக இந்து பத்திரிகை தெரிவிக்கின்றது.

இந்நிலையானது இந்திய இராஜதந்திரம் என்றுமில்லாதவாறு பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ளது என்றே கூறலாம். புலிகளைத் தடை செய்ததன்மூலம் இலங்கையில் சமாதானம் ஏற்பட இந்தியா முட்டுக்கட்டை போட்டுள்ளது என்ற நிலையானது சர்வதேச ரீதியில் இந்தியாவின் போக்கு குறித்து சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

இதேவேளை இத்தடையானது தமிழீழ அரசியலில் இருந்து இந்தியாவைப் புறந்தள்ளியும் உள்ளது விடுதலைப்புலிகள் உத்தியோக பூர்வப் பேச்சாளர் 'ஈழநாதம்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டது போன்று "இந்திய அரசானது தமிழீழ அரசியல் உலகிலிருந்து தனக்குத்தானே ஒரு தடை விதித்துள்ளது போல இந்நடவடிக்கை அமைந்துள்ளது"

இலங்கை விவகாரத்தில் இந்தியா இவ்வாறாக தொடர்ந்த இராஜ தந்திரத் தோல்வியைத் தழுவிக் கொள்வதற்கு இலங்கையின் வரலாற்றையும், யதார்த்தத்தையும் விளங்கிக் கொள்ளத் தவறியமையே காரணமாகும். இவ் அடிப்படையில், ஏற்பட்ட தவறை இந்தியா ஆரம்பத்தில் ஏற்பட்ட தோல்விகளின் பின்பும் விளங்கிக் கொள்ளவில்லை சிலர் சுட்டிக்காட்டிய போதும் திருத்திக் கொள்ளவில்லை. மீண்டும், மீண்டும் பழைய அடித்தளத்தில் இருந்தே தீர்மானங்களை எடுத்து வருகின்றது. இந் நிலை மேலும் தொடருமானால் டெய்லி ரெலிகிராப் கூறியுள்ள பல தசாப்தங்கள் சென்ற பின்பும் கூட இந்தியா இலங்கை விவகாரத்தில் வெற்றி கண்டுவிடப் போவதில்லை

## தகவலறிக்கையை எதிர்த்து டில்லி நீதிமன்றில் மனு

[டில்லி]

போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையை எதிர்த்து திரு. வின்சட்டா போட்டுள்ள மனுவை விசாரிப்பதற்கான விசாரணையை ஜூலை முதல் வாரம் வரையில் டில்லி உயர் நீதிமன்றம் ஒத்திப்போட்டுள்ளது.

நேற்றுமுன்தினம்வின்சட்டாவில் வழக்கறிஞரின் வாதத்தை சிறிதுநேரம் கேட்ட தலைமை நீதிபதி திரு. மித்தல், நீதிபதி சத்வால் அடங்கிய குழு பின்னர் நீதிமன்றத்தில் விசாரணையை ஒத்திப் போட்டது

காபூல்

## விமான நிலையத்தின் மீது ராக்கட் தாக்குதல்கள்

### பிரதமர் மயிரிழையில் உயிர் தப்பினார்

(காபூல்]

ஆப்கானிஸ்தான் இடைக்கால பிரதமர் இப்பதுல்லா மூஜாகுதீதியும் அவரது சகாக்களும் சென்ற விமானம்காபூல் விமான நிலையத்தில் இறங்கிய போது ஏவுகணைகளால் தாக்கப்பட்டுள்ளன. பிரதமரும் அவரது சகாக்களும் காயமெதுவுமின்றி அதிஷ்டவசமாக உயிர்தப்பிவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்ற போதிலும், அவரின் செயலாளர் ஒருவருக்கு காயமேற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் பாகிஸ்தான் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்புகையிலேயே இத்தாக்குதல் நடைபெற்றதாகவும்,

கிளர்ச்சிக்காரர்கள் மூன்று ரொக்கட்டுக்களை ஏவியதாகவும் அவற்றில் ஒன்று பிரதமர் பயணம் செய்த விமானத்தை தாக்கியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கும்பகோணகுண்டுவெடிப்பு விசாரணைக்கு விசேடபிரிவு

(சென்னை)

கும்பகோணம் தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்தில் அண்மையில ஏற்பட்ட குண்டு வெடிப்பு தொடர்பாக சந்தேக நபர்களை கைது செய்ய விசேட பொலிஸ்படை அமைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நடந்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்ட திருச்சி மாவட்ட காவல்துறை ஆணையாளர் இதுபற்றி மேலும் கூறுகையில்; புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களான புரட்சிகர இளைஞர் இயக்கத்தை சேர்ந்தவர்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவித்துள்ளார். தொலைக்காட்சி அஞ்சல் நிலைய காவலாளி உட்பட முப்பது பேருக்கு மேல் பொலிசாரால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கூடங்குளம்

## அணு மின் நிலையம் நிறுவ அணுசக்திகமிசன் திட்டம்

கூடங்குளம் பகுதியில் அணு மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு வெளியாரின் உதவிகள் கிடைக்காமையினால் அணுசக்தி கமிஷன் அங்கு தானே அணுசக்தி மின் நிலையமொன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக அணுசக்தி தலைவர் பி. கே. ஐயங்கார் தெரிவித்துள்ளார்.

எனினும் இதற்கான நிதி வசதியைப் பெறுவது கடினமாகவே இருக்கும் எனக் குறிப்பிட்டதுடன் அணு மின் நிலையத்தை அமைப்பதற்கு கூடங்குளம் பகுதியே மிகவும் பொருத்தமானது எனவும் தெரிவித்தார்.

அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற இரு அவைகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மாநில சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆகியோரும் இத்தேர்தலில் வாக்களிக்க உரிமை உடையவர்கள் என்பது தெரிந்ததே

எதிர்வரும் ஜூலை 24ஆம் திகதியுடன் எட்டாவது குடியரசுத்தலைவர் ஆர். வெங்கட்ராமனின் பதவிக்காலம் முடிவடைவது குறிப்பிடத்தக்கது.

## ஐ. எம். எப். பில் புதிய அங்கத்தவர்கள்

லட்வியா, எஸ்தோனியா, லித்துவேனியா ஆகிய மூன்று நாடுகள் உட்பட ஆறு முன்னாள் சோவியத் நாடுகள் சர்வதேச செலாவணி நிதியத்தில் அங்கத்துவ நாடுகளாகச் சேர்ந்துள்ளன.

முன்னாள் யூகோஸ்லாவிய குடியரசுகளான பொஸ்னியா-கசகோவியாவில் இருந்து தனது எஞ்சிய பணியாளர்களையும் விலக்கிக்கொள்வதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

அங்கு கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட சண்டைக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கடுமையான வன்முறைகளை அடுத்தே செஞ்சிலுவைச் சங்கம் இம்முடிவை எடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து ஐரோப்பிய சமுதாயம் செர்பியாவிற்கு எதிராக தடை நடவடிக்கைகளை விதிப்பதான முடிவில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது"

யூகோஸ்லாவிய குடியரசான பொஸ்னியாவில் பொறுத்துக்கொள்ள முடியாத அளவுக்கு மனித உரிமைகள் மீறப்பட்டு வருவதாகவும் செஞ்சிலுவைச் சங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதுடன் அந்நாட்டின் தலைபிணர்களை ஏற்கனவே விலக்கிக் கொண்டுள்ளது. கடந்த வாரம் இச்சங்கத்தின் தொண்டர் ஒருவர் கொல்லப்பட்டதை அடுத்தே அவர்கள் அங்கிருந்து விலகிக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மக்கள் நெருக்கடியாக உள்ள கடைத்தெருப்பகுதியொன்றில் ஏற்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலைத் தொடர்ந்து சரசவோவியாவில் சண்டையிடும் இனக்குழுக்களுக்கிடையிலான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இத்தாக்குதலில் குறைந்தது இருபது பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளனர். இரத்தக் களரி தொடர்ந்து நீடிக்கும் நிலையில் உள்நாட்டுப் போருக்கு அரசியல் தீர்வு காண தாங்கள் தொடர்ந்து பாடுபட முடியாதென முஸ்லிம் பிரதிநிதி குழு கூறியதன் பின்னர் இப்பேச்சுக்கள் முறிவடைந்ததாக ஐரோப்பிய சமூக மத்தியஸ்தர் ஒருவர் கூறினார்.

பாடசாலை மாணவர்

## உணவு முத்திரை அறிக்கை சமர்ப்பிப்பதில் தாமதம்

[யாழ்ப்பாணம்]

பாடசாலை மாணவர்கள் உணவு முத்திரை தொடர்பாகப் பாடசாலை அதிபர்கள் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கை உரிய காலத்தில் யாழ். கல்வித் திணைக்களத்துக்குக் கிடைப்பதில்லைஎனத் தெரிவிக்கப்படுகிறது

1991 டிசம்பர், 1992 ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான அறிக்கைகளை இது நாள் வரை சில அதிபர்கள் தமக்கு அனுப்பவில்லை என்று யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சில மாதாந்த அறிக்கைகளில் தரவுகள் பிழையாக தரப்படுவதாகவும் அதே வட்டாரங்கள் கூறுகின்றன

மாதாந்த அறிக்கைகளை மாதாமாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் செயலகத்துக்கும், வட - கிழக்கு மாகாண அமைச்சுக்கும் அனுப்பிவைக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது

அறிக்கைகள் தாமதமாகக் கிடைப்பதால்மாணவர் உணவு முத்திரைக்கான பணத்தை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்குவதில் சுணக்கம்ஏற்படுகிறதென்றும் உணவு முத்திரைகள் யாழ். பிரதேசப் பாடசாலைகளுக்கு உரிய காலத்தில் கிடைப்பதில்லை என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஈழநாதம்

தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவு

# தம்பலகாமம் பகுதியில் முஸ்லிம் கோருகின்றனர்

(திருக்கோணமலை)
தம்பலகாமத்தில் பெருமளவில் குடியேறியுள்ள முஸ்லிம்கள் தமக்கென தனியானதொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவொன்று அமைக்கப்படவேண்டும் என கோரியுள்ளனர். இந்த அளவிற்கு தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமான தம்பலகாமத்தில்

1990 ஆம் ஆண்டுமுதல் சிறிலங்கா இராணுவத்தினர் தம்பலகாமத்தில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களை அகதி முகாமில் அடைத்து வருகின்றனர் தம்பலகாமத்தில் அகதி முகாம் தவிர்ந்த வேறு இடங்களில் தமிழ்மக்கள் வெளியேற்றப்பட்டு அவர்களின் இடங்களில் சிங்களவர் சிறிலங்கா அரசால் குடியமர்த்தப்பட்டனர். முஸ்லிம்கள் தாமாகவே தமிழர்களின் வீடுகளைப் பிடித்து அவற்றில் குடியமர்ந்துள்ளனர்.

இவ்வாறு குடியமரும் முஸ்லிம்களின் எண்ணிக்கை தனி அரசாங்க அதிபர் பிரிவு கோரும் அளவிற்கு உயர்ந்துள்ளது.

முஸ்லிம்கள் குடியேறியுள்ளனர்.

## இறுதிப் போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டுஅபிவிருத்திச் சபை நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## கருத்தரங்கு

யாழ் கோட்டத்தில் இயங்கும் அனைத்து தனியார் கல்வி நிறுவன இயக்குநர்களுக்கும் பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் நாளை 1 6-92 பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறவுள்ளது,

புதிய விஞ்ஞான கல்வி நிலையத்தில நடைபெறவுள்ள (எழிலகம் முன்பாக) இக் கலந்துரையாடலுக்கு அனைத்து இயக்குநர்களையும் பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செஞ்சோலை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்,

இலங்கை
திரும்பியிருப்பதாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டே மேற்படி வெளிநாட்டு நிதிஉதவிபெறப்பட்டதாக கூறப்படுகின்றது. மேற்படி நிதி அகதிகளுக்கு வழங்கப்பட்டது என்பதை வெளிப்படுத்துவதற்காக இக்குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் சுமார் 500ரூபா வழங்கப்பட்டது மிகுதிபபணம் பாதுகாப்பு நிதியத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது.

இதனால் தாயகம் திரும்பியோருக்கான நலவாழ்வுத் திட்டம் எதனையும் நடைமுறைப்படுத்துவதற்கு அரசு இதுவரை தீர்மானிக்கவில்லை இவ் அகதிகளில் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு மட்டும் தற்போது உளுத்துப்போன உலர் உணவுவகைகள் வழங்கப்பட்டு வருவதாக மேற்படி முகாம்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன(க)

ஒரே குடும்பத்தை
வாரத்தில கூடியிருந்து பேசிக்கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ம. மகேஸ்வரி (வயது 22) இவரது மகன் உதயகுமார் (வயது 4), இவரது தாய் சீதாதேவி(வயது60), செல்லன் (வயது 50) இவரது சகோதரி சி.நீலா (வயது 30) ஆகியோர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இக் குடும்பத்தில் கணவன் மட்டுமே உயிர் தப்பியுள்ளார்.

இக்குடும்பத்தினர் கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் தையிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து மேற்படி அகதி முகாமில் தங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றைவிட படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அமுதாயினி (வயது16), இரத்தினம்(வயது 85) ஆகியோர் நேற்று நள்ளிரவுமரணமடைந்துள்ளனர்.

# முப்படைகளின் தாக்குதலில் 30க்கு மேற்பட்டோர் காயம்

வலி வடக்கின் பல பாகங்களிலும் நேற்று அதிகாலை முதல பதின்மூன்று மணிநேரம் தொடர்ச்சியாக நடைபெற்ற முப்படைகளினதும் தாக்குதல்களினால் முப்பதுக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் படுகாயமடைந்தனர்

நேற்று அதிகாலை 5 30 மணிக்கு ஆரம்பமான முப்படைகளின் தாக்குதல்களும் மாலை 6 45 மணிவரை நீடித்தது சிறிலங்கா இராணுவக் குண்டுவீச்சு விமானங்களுலங்குவானூர்திகள், எறிகணை தாக்குதலகள், கடற்படைப் பீரங்கித் தாக்குதல்களினாலேயே இவர்கள் படுகாயம் அடைந்தனர்.

படுகாயமடைந்த முப்பதைந்து பேர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் இவர்களது பெயர் விபரம் வருமாறு:

பொ பஞ்சலிங்கம்(5) உரும்பராய். பொ சுந்தரம்பிள்ளை (55) அளவெட்டி, ம சசிகுமார் (8) கோண்டாவில். மு. ஜெயச்சந்திரன் (20) தெல்லிப்பளை. கி மணிவண்ணன் (18) தெல்லிப்பளை, கு.மயில்வாகனம் (65) மருதனார்மடம், சு. ஞானபூங்கோதை (44) அளவெட்டி து ஈசன் (17), கே. இலட்சுமி (55 ஏழாலை. ம. மதுமாதா (7) மாவிட்டபுரம், எஸ். சுதர்சன் (17) ஊரெழு, ப. செல்லர் மாவிட்டபுரம், நாகம்ம (65) தெல்லிப்பளை, ஜெகதீஸ்வரன், த ஈசன் அளவெட்டி சகிலா (24, மாக்குவில் செல்லையா 56) கட்டுவன் சின்னத்தம்பி (80) அம்பனை சி. லீலாதேவி (37) அம்பனை, ந நந்தகுமார் 17). சிவநாதன் (23), கணேசானந்தன் (14) பன்னாலை, வ. செல்லர்(66) அம்பனை, செ நாகம்மா (60) அம்பனை, மணிநாதன் (36), பொன்னுத்துரை (55), சந்திரகுமார் (22). சுந்தரம்பிள்ளை (53) பஞ்சலிங்கம் (52) இவர்களைவிட மேலும் சிலர் மேற்படி தாக்குதல்களில் சிறு காயங்களுக்குள்ளாகி அருகில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்றனர். இவர்களது பெயர் விபரங்கள் உடனடியாகத் தெரியவில்லை.

# வலி-வடக்கிலிருந்து மக்கள் பெருமளவில் இடம்பெயர்வு

வலிகாமம் வடக்கின் பல பகுதிகளிலும் உள்ள மக்கள் குடியிருப்புக்களை மையமாகக் கொண்டு சிறிலங்காவின் முப்படைகளும் நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களால் அப்பகுதி மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்தவண்ணமுள்ளனர்

பலாலி, காயர்வியூ பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களிலிருந்துஏவபபட்ட எறிகணைகளாலும் துப்பாக்கி வேட்டுக்களாலும் மக்கள் செறிந்த இடங்களை விட்டு வெளியேறினர் இவர்கள் கால் நடைகளையும் பெட்டிகளையும் தூக்கியவண்ணம் குழந்தைகளை கையிலும் கொண்டு ஓட்டமும் நடையுமாக சிலரும் சைக்கிள்களில் சிலருமாக அம்பனை, தெல்லிப்பளை, பன்னாலை பகுதிகளிலிருந்து அளவெட்டி, பண்டததரிப்பு மல்லாகம், பகுதிகளை நோக்கி சென்றுகொண்டிருந்தனர்.

இடம்பெயர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் வீதியோரங்களிலும் ஆலயங்களிலும், கடைவிறாந்தைகளிலும் சிறுசிறு பொதிகளுடன் தங்கியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

கண்மூடித்தனமான
களும் இடைவிடாது தாக்குதல் நடாத்தியவண்ணமிருந்தன கடற்பரப்பில் தரித்து நிற்கும் பீரங்கிப் படகுகளில இருந்து தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

அதிகாலை 5-30 மணியவில் இத்தாக்குதல்கள் ஆரம்பமாகியதும் விரைந்து வந்த இரு குண்டு வீச்சு விமானங்கள் தெல்லிப்பளை, கட்டுவன் ஆகிய பகுதிகளிலும் அம்பனை, வசாவிளான் ஆகிய பகுதிகள் மீது பலதடவை குண்டுத் தாக்குதல்கள் நடாத்தின இத்தாக்குதல்களில் பொது மக்களின் குடியிருப்புக்கள் பல சேதமடைந்தன. முற்பகல் 9.45 மணியளவில் சுன்னாகத்தில றொட்டியாலடி, பெற்றோல் நிலையம், பழைய பொலிஸ் நிலையம் ஆகிய பகுதிகளில் நடாத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சின்போது மருத்துவமனை ஒன்று முற்றாக சேதமடைந்ததுடன் அருகில் இருந்தமண்ணெண்ணைக் கடை உட்பட பல வீடுகள் பலத்த சேதமடைந்தன மாலை 5 30 மணியளவில் காயமடைந்த பொது மக்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்தமினிபஸ்ஒன்றை மருதனாமடம் இணுவில் பகுதியில் விமானங்கள் விரட்டி விரட்டி குண்டுத் தாக்குதல் நடாத்தியதில் இருவர் காயமடைந்தனர் இத்தாக்குதலில் இணுவில மருத்துவமனை

முல்லைத்தீவு
தி வருகின்றன முல்லைத்தீவு கடற்பரப்பில் நிலைகொண்டுள்ள கடற்படைப் பீரங்கிப் படகுகள் கடும் பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன.

இதேவேளை முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து கண்மூடித்தனமான எறிகணை வீச்சு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ் இராணுவ நடவடிக்கையில 40 க்கு மேற்பட்ட இராணுவ வாகனங்களும் 2500 க்கு மேற்பட்ட படையினரும் ஈடுபடுத்தபபட்டுள்ளனர்.

பெரும் எடுப்பிலான இவ் இராணுவ நடவடிக்கைக்கு எதிராக புலிகள் சளைக்காது போராடி வருகின்றனர்

பகுதிக்கு விரைந்து வந்த இரு குண்டு வீச்சு விமானங்கள்டு இப்பகுதியில் பலதடவைகள் குண்டுதாக்குதலை நடாத்தின

இவற்றைவிட அளவெட்டி, சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, கட்டுவன், குரும்பசிட்டி, வளலாய், பன்னாலை, பண்டத்

# புலிகளின் நேச சக்தியாக சிக்கியர்கள் இருப்பார்கள்

- அகாலிதளத் தலைவர் சிம்ரஞ்சித்சிங்மான்

(சென்னை)
ராஜீவ் காந்தி கொலையில் புலிகளுக்கு பங்குஏதும்இல்லை என்பதனை கொலை வழக்கு சூழ்நிலைகள் சந்தேகத்திற்கப்பால நிருபிக்கின்றன என அண்மையில் சென்னையில் இருந்து வெளியாகும் பிரபல ஆங்கில சஞ்சிகையான ஃபுரென்லைனுக்கு அளித்த பேட்டியொன்றில் சீக்கிய அகாலிதள் தலைவர்களில் ஒருவரான சிம்ரஞ்சித்சிங்மான் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது: புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ராஜீவ் காந்தி கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதை நிரூபிக்கும் எந்த வகையான சான்றையும் இவர்கள் எங்கே பெற்றிருக்கிறார்கள்? இலங்கையில் இருந்து பிரபாகரன் நாடு கடத்தப்பட்டு இந்தியாவில் கைது செய்யப்படுவாரேயானால் அவரது விவகாரத்தில் நாம் அக்கறை காட்டுவோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் சுதந்திரம் சுயாதிபத்தியம் ஆகியவற்றுக்காக போராடும் மக்களுடன் தமது கட்சி தோழமை உறவு பூண்டிருப்பதாகவும் அத்தகைய பிரதான தோழமைச் சக்திகளில் ஒன்றாக தமிழீழ விடுதலைப் புலிகளும் விளங்குவர் எனவும் சிம்ரஞ்சித்சிங்மான் தெரிவித்துள்ளார்.

# முல்லை மோதலில் வீரகாவியம் படைத்தோர்





# புலிகளின் தடை விவகாரம்; சட்ட வல்லுனர்கள் சர்ச்சை

விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடை செய்வதற்கு மத்திய அரசாங்கம் 1967 ஆம் ஆண்டின் சட்டவிரோத நடவடிக்கைகள் சட்டத்தை ஏக

வேண்டும். சம்மந்தப்பட்ட இயக்கமும் தனது தரப்பிலான நியாயத்தை முன்வைப்பதற்காக இந்த விசாரணைக் குழுவினால் அமைக்கப்பட

இது விதமாக எந்தவித விசாரணைகள் இன்றியும் இவ் இயக்கம் தடைசெய்யப்பட்டது குறித்து பலதரப்பின



லெப்டினன்
நந்தன்
[சுதர்சன்]



லெப்டினன்
மறவன்
[தவபாலன்]

29-05-1992 முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து கவச வாகனங்கள் சகிதம் முன்னேறித் தாக்குதலை மேற்கொண்டவாறு வெளியேறிவந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் உக்கிர தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் 10 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இரண்டு கவச வாகனங்கள் விடுதலைப் புலிகளால் தகர்த்தழிக்கப்பட்டன.

வீராவேசமாக போரிட்ட இம் மோதலில் நான்கு வீர வேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர்.



2 ஆம் லெப்டினன்
நாயகன்
[கேதீஸ்வரன்]



2 ஆம் லெப்டினன்
பாணன்
[உதயமோகன்]

## தமிழீழ விடுதலைப் புலிகள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடை செய்வதற்கு மத்திய அரசாங்கம் 1967 ஆம் ஆண்டின் சட்டவிரோத நடவடிக்கைகள் சட்டத்தை எதற்காக தேர்ந்தெடுத்தது என்பது குறித்து அரசியல் அவதானிகள் மத்தியில் வேறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சட்டத்தின் பிரகாரம் ஒரு இயக்கத்தை சட்டவிரோதமானது என்பதை தீர்மானிக்க போதிய ஆதாரமிருக்கிறதா என்பதை தீர்மானிக்க மத்திய அரசாங்கம் மேல் நீதிமன்ற நீதிபதியொருவரை கொண்ட தனிநபர் விசாரணைக் குழுவை அமைக்க வேண்டும். சம்மந்தப்பட்ட இயக்கமும் தனது தரப்பிலான நியாயத்தை முன்வைப்பதற்காக இந்த விசாரணைக் குழுவினால் அழைக்கப்படலாம்.

இந்த விளக்கத்தை ஆராயும் விசாரணைக் குழு தடைப் பிரகடனத்துக்கு சான்றுகள் இருப்பதாக உறுதிசெய்தால் மட்டுமே இயக்கம்மீதான தடை பிரகடனப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து இருவருடங்களுக்கு அமுல்படுத்தலாம். பின்னர் இத்தடையை புதிய அறிவித்தல் மூலமாக தொடரலாம்.

இது விதமாக எந்தவித விசாரணைகள் இன்றியும் இவ் இயக்கம் தடைசெய்யப்பட்டது குறித்து பலதரப்பினரிடமிருந்து பலவிதமான அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

### மூன்று

றது.

மட்டக்களப்பு வாகனேரி இராணுவ முகாமிலிருந்தும் ஆறாம்கட்டை இராணுவமுகாமிலிருந்தும் கேணிஞ் சேனைச் சந்திமுகாமிலிருந்தும் ரோந்து செய்யவென வெளியேறிவந்த இராணுவத்தினர்மீது இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இவர்கள் வாகனேரிச் சந்திக்குவந்து ஒன்று சேர்ந்ததும் விடுதலைப் புலிகள் இவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர்

மொத்தம் 200 இராணுவத்தினர் இந்த அணியில் இருந்தனர் சுமார் 15 நிமிட நேரம் இச் சண்டை நீடித்தது

இந்த இராணுவத்தினருக்கு உதவியாக ஆறாம் கட்டை இராணுவ முகாமிலிருந்து மூன்று கவசவாகனங்கள் சகிதம் முன்னேறி] வந்தனர். இவர்கள் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத் தாக்குதல்களின்போது 27 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப் புலிகள் தரப்பில் ஒன்பது போராளிகள் வீரச் சாவைத் தழுவிக் கொண்டனர்,

### 9 வேங்கைகள்

2ஆம் லெப்டினன் ராமன் (டினோ - கணபதிப்பிள்ளை சிவயோகநாதன் காரைதீவு, அம்பாறை). வீரவேங்கை சௌந்தரலிங்கம் (சேரகுலவரதன் - கார்த்திகேசு பாஸ்கரன் அக்கரைப்பற்று அம்பாறை), வீரவேங்கை ராகவன் (மனுவெல் ஜெயராஜ் கருவேப்பங்கேணி, மட்டக்களப்பு) வீரவேங்கை வனிதன் [புவி தங்கையா சுந்தரராஜா சின்னப் புல்லுமலை, கரடியனாறு], வீரவேங்கை பாலமோகன் [மோகன் - இராசதுரை கனகரத்தினம் வாழைச்சேனை] வீரவேங்கை ஜெயசுதானந்தம் [ஜெயசுதன் - பாலசிங்கம் ரவீந்திரன் சென்றல் காம்ப் அம்பாறை] ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### அள்ளிய

- ★ நடுத்தர ரவைகள் - 858
- ★ லிங்குடன் ரவைகள் - 210
- ★ தொலைத்தொடர்பு சாதனம் - 01
- ★ ஜே. ஆர் - 01
- ★ ஏ கே. கோல்சர் - 08
- ★ செற் கோல்சர் - 01
- ★ புகைக்குண்டு - 01
- ★ தண்ணீர்க்கான் - 09
- ★ தண்ணீர்கான்கோல்சர் -07
- ★ இராணுவ பட்டி - 07
- ★ கிட் பாக் - 01
- ★ தலைக்கவசம் - 07
- ★ சப்பாத்து - 10 சோடி

### கட்டுவனில்

கொண்ட கப்டன் செல்வன் (செல்லத்துரை தெய்வசபாநாதன், புலோப்பளைமேற்கு. பளை), கப்டன் வீரத்தேவன் (பியூஸ்மார்க் துரைராஜா சிவலிங்கம்ஏ.வி.வீதி.அரியாலை). வீரவேங்கை யோன்சன் (இறையன்பன் திருச்செல்வம் ரவிச்சந்திரன் 1 ஆம் வட்டாரம் புங்குடுதீவு), வீரவேங்கை புகழேந்தி (லம்பா- சுப்பிரமணியம மதிகருணைவாசம், அளவெட்டி வடக்கு அளவெட்டி), பாவாணன் (கென்னடி- பத்மநாதன் மயூரன் பன்னாலை, தெல்லிப்பளை), வீரவேங்கை வேல்மாறன் (ஐயாத்துரை மனோகரன் கீரிமலை வீதி சித்தங்கேணி) வீரவேங்கை இன்பன் (கணேசபிள்ளை துஷ்யந்தன் கோப்பாய் வடக்கு), வீரவேங்கை வெற்றியரசன் (கிருஸ்ணபிள்ளை நாகலிங்கம் ஐயனார்கோவிலடி சண்டிலிப்பாய் ஆகியோர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இவ் எட்டு பேருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.

### வீரவேங்கை

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை தமிழ்முன்(சிவராசா புவனேந்திரன், 6 ஆம் வட்டாரம், வேலணை) என்னும் போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

யில் விமானங்கள் விரட்டி விரட்டி குண்டுத் தாக்குதல் நடாத்தியதில் இருவர் காயமடைந்தனர் இத்தாக்குதலில் இணுவில் மருத்துவமனையும் சிறு சேதமடைந்தது

மாலை 5.45 மணியளவில் சேந்தாங்குளம் கீரிமலைப் சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, கட்டுவன், குரும்பசிட்டி, வளலாய், பன்னாலை, பண்டத்தரிப்பு பிராங்கொடை ஆகிய பகுதிகளை நோக்கி இடைவிடாத ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் நடாத்தப் பட்டன.

## மரண அறிவித்தல்கள்

### சண்முகநாதன் யோகநாதன்

சண்முகநாதன் யோகநாதன்[நற்குணம்/ நிரோசன்] 30-05-92 அன்று வீரச்சாவு அடைந்தார். இவர் சண்முகநாதன் பூரணத்தின் அன்பு மகனும், வைத்தியநாதன், பரமேஸ்வரி, யோகேஸ்வரி, கேதீஸ்வரி, அருட்செல்வநாதன், மாணிக்கேஸ்வரி ஆகியோரின் சகோதரனுமாவார் இத்தகவலை உற்றார். உறவினர் நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
தாயார்: பூரணம் நடனமுருகன் ஸ்ரோஸ்
நல்லூர், யாழ்ப்பாணம்.

[சி/4486]

### வே. ஆறுமுகம்
(ஓய்வு பெற்ற புகையிரத ஊழியர்)

14 முல்லைத்தீவு வீதி, பரந்தனை வசிப்பிடமாகக்கொண்ட திரு. வே. ஆறுமுகம் 30-05-92இல் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும், சிறீதரன் [ஆசிரியர் மல்லாகம் மகாவித்தியாலயம்], சுயேகராஜினி, சிறீநதவன், சிறீவரதராஜன், சிறீவேந்தன் [மாவீரர் இளங்கோ] தவமலா ஆகியோரின் தந்தையும், திருகுணம், திருமதி அருந்தவநேசம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை [31-05-92] இன்று பிற்பகல் 2.00 மணிக்கு சிவகுரு வீதி, ஏழாலை மேற்கு, ஏழாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஆ. சிறீதரன்
(மகன்)

[2619]